ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2159/52 - 2020 ජනවාරි මස 25 වැනි සෙනසුරාදා - 2020.01.25
2159/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி 25 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2001.05.23 ஆம் திகதிய 1185/12ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டின் 185 ஆம் இலக்க மற்றும் 2001.05.22 ஆம் திகதிய காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டு களின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக் களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், 2001.02.20 ஆந் திகதிய மற்றும் KA/MTG/01/56 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட முழுக்காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல : LD/05/2001/VEP/67.
பிரதேச செலாளரின் இல. : මතු/ඉඩ/4/28.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2020, சனவரி 04.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மதுகம பிரதேச செயலாளர் பிரிவில், இத்தகொட பற்று சிறு பிரிவில், வெல்கந்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2001.02.20 ஆம் திகதிய KA/MTG/01/56 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு:

*1.* **துண்டு A - க்லோடன்வத்தை பாந்திய பகுதி - விஸ்தீரணம் : 3.2990 ஹெக்டயார்**

வடக்கு : வீதி, கால்வாய் மற்றும் அகலவத்தை பெருந்தோட்டக் கம்பனி உரிமைகோரும் பாந்திய பகுதி; கிழக்கு : அகலவத்தை பெருந்தோட்ட கம்பனி உரிமைகோரும் பாந்திய பகுதி, ஏ.ஜோன் துடுகலகே உரிமை கோரும் பஹல ஹல்கஸ்முல்ல, சி. வெந்தபோனா உரிமைகோரும் மல்புதன தெனிய, அரசு மற்றும் எஸ். சோமபால உரிமைகோரும் கெட்டலந்த; தெற்கு : ஏ. ஜோன் துடுகலகே உரிமைகோரும் பஹல ஹல்கஸ்முல்ல, சி. வெந்தபோனா உரிமைகோரும் மல்புதன தெனிய, அரசு மற்றும் எஸ். சோமபால உரிமைகோரும் கெட்டலந்த; மேற்கு: வீதி, அகலவத்தை பெருந்தோட்ட கம்பனி உரிமைகோரும் பாந்திய பகுதி மற்றும் கால்வாய்.

02-115